**O.S.524/2008 P.W.1 - கிருஷ்ணன் 04.07.2019**

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

நான் இந்த வழக்கில் வாதி. இந்த வழக்கில் ஏற்கனவே பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, முதல் விசாரணையாக பதிவு செய்யப்பட்டு, 1 முதல் 14 சான்றாவணங்கள் வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டது. தற்போது கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கூடுதலாக மேலும் இரு ஆவணங்கள் ஏற்கனவே கூடுதல் எதிர் வழக்குரையுடன் அசல் வழக்கு எண்.438/2006ல் தாக்கல் செய்துள்ளேன். அவைகளை வாதி தரப்பில் இவ்வழக்கில் ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 19.08.1999 தேதியிட்ட அசல் வழக்கு எண்.83/1997 தீர்ப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.15.
2. 19.08.1999 தேதியிட்ட அசல் வழக்கு எண்.83/1997 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.16.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை:-</u>**

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

**<u>1 மற்றும் 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் 17 GST ரோடு ஊரப்பாக்கத்தில் வசிக்கிறேன். நான் SSLC வரை படித்திருக்கிறேன். நான் தபால் துறையில் கிளை அஞ்சலக தலைவராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று விட்டேன். தற்போது விவசாய தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான விவரங்களை எனது வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். வழக்கு விவரங்கள் படி தான் வழக்குரை தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்குரையை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். அதில் நான் சொன்னபடி சரியாக இருந்தது. வழக்கின் பிரதிவாதிகள் அனைவரும் எனது சகோதரர்கள். நான் போட்ட இந்த வழக்கிற்கு பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரை ஏதும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் பிரதிவாதிகள் அவர்களுடைய தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யாததை என்னுடைய வழக்கறிஞர் சொல்லி தெரிந்து கொண்டேன். எனது தகப்பனார் பெயர் மதுரைமுத்து. என் தகப்பனாருக்கு நான், பிரதிவாதிகள், என் அம்மா இந்திராணி அம்மாள், மற்றும் எனது சகோதரிகள் ராஜேஸ்வரி, கண்ணகி என்கிற அனுசுயா, கௌரி ஆகியோர் வாரிசுதாரர்கள் ஆவார்கள். நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை பிரதிவாதிகளான ஆண் வாரிசுகள் பெயரில் மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் அம்மா மற்றும் பெண் வாரிசுகள் மேல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயார் மற்றும் பிரதிவாதிகள் சேர்ந்து அசல் வழக்கு எண்.438/2006 என்ற வழக்கை என் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கை பிரதிவாதிகள் என் மீது பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். நான் தாக்கல் செய்த இந்த வழக்கின் தாவா சொத்தின் பேரில் தான் மேற்சொன்ன வழக்கை பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.438/2006ல் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பற்றிய விவரங்களை நான் தெரிந்து கொள்ளவில்லை. அந்த வழக்கில் நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன். அந்த பதிலுரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். என் சகோதரர்களான இந்த வழக்கின் பிரதிவாதிகள் பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு எண்.438/2006யை தாக்கல் செய்த பிறகு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயார்

இந்திராணியம்மாள் தற்போது பிரதிவாதிகளுடன் தான் இருக்கிறார் என்றால் என் அப்பா இருக்கும் வரை என்னுடன் தான் இருந்தார். என் அப்பா இறந்த பின்னர் பிரதிவாதிகளுடன் இருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் தாவா சொத்தில் எத்தனை சர்வே எண்கள் இருக்கிறது என்றால் 4 சர்வே எண்கள் இருக்கிறது. அந்த 4 தனிப்பட்ட சொத்துக்களின் எல்லைகள் பற்றி வழக்கின் சொத்து விவரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் எல்லாமே மொத்தமாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கோரிய பரிகாரத்தில் எந்த பிரதிவாதியின் பெயரில் பரிகாரம் கோரியுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த பிரதிவாதி தொந்தரவு செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் மதுரைமுத்து இறப்பதற்கு முன்னர் எங்கள் குடும்பம் கூட்டு குடும்பமாக இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பம் ஆதியில் கூட்டு குடும்பமாக இருந்தது. என் தகப்பனார் இறப்பதற்கு முன்னர் கூட்டு குடும்பமாக இல்லை. கூட்டு குடும்பத்தை எனது தகப்பனார் தான் கர்த்தாவாக இருந்து நிர்வாகம் செய்து வந்தார் என்றால் கிடையாது. கூட்டுகுடும்பத்திற்கு பாத்தியப்பட்ட மூதாதையர் சொத்துக்கள் அனைத்தையுமே என் தகப்பனார் தான் நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான். கூட்டு குடும்ப நிர்வாகத்தின் போது எங்களுக்கு சொந்தமான மூதாதையர் சொத்துக்களில் சில சொத்துக்களை விற்று அதன் மூலம் வேறு சொத்துக்கள் வாங்கினார் என்றால் விற்றார் ஆனால் வேறு சொத்துக்கள் எதையும் வாங்கவில்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

**1 மற்றும் 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

தாவா சொத்துக்கள் மற்றும் ஊரப்பாக்கம் ஐய்யன்சேரியில் உள்ள இதர சொத்துக்கள் சம்பந்தமாக ஒரு பாகப்பிரிவினை 24.10.1975ல் என் தகப்பனார் மதுரை முத்து நாயக்கர் மற்றும் அவரது ஆண் வாரிசுகளுக்கு இடையே ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆவண எண்.4179/1975 முன்னிலைக்கு மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஐய்யன்சேரி மற்றும் ஊரப்பாக்கத்தில் உள்ள நிலங்கள் சம்பந்தமாக தான் மேற்படி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் வீடு மற்றும் வீடு சம்பந்தப்பட்ட நிலங்கள் மற்றும் சத்திரம் உட்பட அனைத்தும் என்னுடைய தகப்பனார் மதுரை முத்து நாயக்கர் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை செய்யப்பட்ட காலத்தில் எனக்கும், என்னுடைய மூத்த சகோதரர் கோவிந்தராஜ் ஆகிய இருவருக்கும் தான் நடந்திருந்தது என்றால் சரிதான். அந்த திருமணங்களை என் தகப்பனார் அவருடைய செலவில் தான் நடத்தி வைத்தார் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் வீடு, வீடு சம்பந்தப்பட்ட நிலங்களை நான், என் அப்பா, அம்மா மற்றும் என் சகோதரர்கள் ஆகியோர் அனைவரும் கூட்டு குடும்பமாக அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். என் சகோதரிகளுக்கு என் அப்பா தான் அவருடைய செலவில் திருமணம் செய்து வைத்தார். 1975ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை படி ஒதுக்கப்பட்ட விவசாய நிலங்களை அவரவர்கள் ஆண்டு அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் என் தகப்பனார் மதுரை முத்து நாயக்கருக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும், என் தாத்தா வீரப்ப என்கிற வீரப்பத்திர நாயக்கருக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தாவின் காலத்திற்கு பிறகு மேற்படி தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை என் தகப்பனார் மற்றும் அவருடைய வாரிசுகளாகிய நாங்கள் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். எனவே வழக்குரை பத்தி 4ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் தவறானது என்று சொன்னால் சரியல்ல. 20 ஆண்டுகளாக நான் மட்டும் அல்லாமல் மற்ற சகோதரர்களும் என் தாயாரும் சேர்ந்து தான் தாவா சொத்துக்களை கூட்டு குடும்பமாக அனுபவித்து வந்தோம் என்றால் சரியல்ல. வழக்குரை பத்தி 5ல் 1975ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை என் தகப்பனாருக்கும்

பிரதிவாதிகளுக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருப்பது தவறு. வாதி, பிரதிவாதிகள் மற்றும் என் அப்பா அனைவருக்கும் இடையே ஏற்பட்டது என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

**<u>1 மற்றும் 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

1975ல் எனக்கும் என் தகப்பனார் மற்றும் சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட பாகப்பிரிவினை படி "A" அட்டவணை சொத்து என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். "A" அட்டவணை சொத்து வீடு மற்றும் வீடு சம்பந்தப்பட்ட நிலங்கள் என்றால் இல்லை. நம்பர் 17, GST ரோடு ஊரப்பாக்கத்தில் உள்ள இடத்தில் வீடு உள்ளது என்றால் அந்த இடமானது புஞ்சை நிலம். என்னுடைய வழக்குரையில் நம்பர் 17, GST ரோட்டில் உள்ள இடத்தில் வீடு உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சினிமா கொட்டகை இருந்தது என்றால் இல்டலை. என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒரு பகுதி வாடகைக்கு விடப்பட்டு அஞ்சலகம் இயங்கி வந்தது என்றால் அஞ்சலகம் இயங்கி வந்தது. வாடகை எதுவும் பெறப்படவில்லை. மேற்படி "A" அட்டவணையில் அடங்கிய அதே வீட்டு மனையில் BSNL செல்போன் டவர் வைக்க வாடகைக்கு விடப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி "A" அட்டவணையில் அடங்கிய 3 சர்வே எண்களில் உள்ள நிலத்தின் ஒரு பகுதி நெடுஞ்சாலை துறையினரால் கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நெடுஞ்சாலை துறையினரால் கையகப்படுத்தப்படுவதற்கு முன்பாக எனக்கும், என் தகப்பனார் மற்றும் சகோதரர்களுக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நிலத்தை கையகப் படுத்தியதற்காக இழப்பீடு வழங்கப்பட்டது என்றால் அவரவர் பங்கிற்குரிய தொகை அவரவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆதியில் நம்பர் 17, GST ரோடு, ஊரப்பாக்கத்தில் உள்ள இடத்தில் இருந்த வீடு ஓட்டு வீடாக இருந்தது என்றால் சரிதான். நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு வந்த நஷ்டஈட்டு தொகை மற்றும், விவசாய வருமானத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு தளம் போட்ட வீடாக கட்டப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது மேற்படி விலாசத்தில் உள்ள வீடு தளம் போட்ட வீடு தான் என்றால் சரிதான். மேற்படி அந்த வீட்டில் தான் நான், என் தகப்பனார், பிரதிவாதிகள் ஆகியோர் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். கூட்டு குடும்பமாக வாழந்து வந்த காலத்தில் என்னை போலவே பிரதிவாதிகளுக்கும் குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, வங்கி கணக்கு

ஆகியவைகள் மேற்படி விலாசத்தில் தான் வழங்கப்பட்டது என்றால் சரிதான். தனித்தனியாக வைத்திருந்தார்கள். மேற்படி சொத்து சம்பந்தமாக என் தகப்பனார் வாழ்ந்த காலத்தில் 1989ல் "A" அட்டவணை சொத்து சம்பந்தமாகவும், பிரிக்கப்படாத சொத்துக்கள் சம்பந்தமாக ஒரு குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1989ல் என் முன்னிலையிலும், மற்ற பிரதிவாதிகள் முன்னிலையில் தான் குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டது என்றும், ஆனால் தற்போது அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் என் தகப்பனார் சர்வே எண்.156/2ல் ஏற்கனவே இருந்த ஓட்டு வீட்டை இடித்து விட்டு சகல வசதிகளுடன் கூடிய மாடி வீட்டை கட்டினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட "A" அட்டவணை சொத்து சம்பந்தமாக எத்தனை உயில் எழுதப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அஞ்சல் துறையில் தான் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். பொதுவாக நாட்டு நடப்புகள் எனக்கு ஓரளவிற்கு தெரியும். ஒரு சொத்து ஒருவர் பெயருக்கு உயில் எழுதப்பட்டிருந்தால், அந்த உயிலை ரத்து செய்யாமல் வேறொரு நபருக்கு உயில் எழுதப்பட முடியாது என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக என் தகப்பனார் எனக்கு எழுதி கொடுத்த உயிலை தவிர வேறு எந்த உயிலும் எழுதவில்லை. 13.03.1997ல் எனக்கு எழுதப்பட்ட உயிலில் என்னென்ன சாராம்சங்கள் இருக்கிறது என்ற விவரம் பற்றி எனக்கு தெரியும். எனக்கு எழுதப்பட்ட உயிலில் ஏற்கனவே அதே சொத்து சம்பந்தமாக ஒரு உயில் எழுதப்பட்டு அந்த உயில் ரத்து செய்யப்பட்ட விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு எழுதுவதற்கு முன்பாக எழுதப்பட்ட உயிலில் யார் யார் பெயருக்கு எழுதப்பட்டது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

**1 மற்றும் 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1992ல் என் தந்தை வீட்டு மனை மற்றும் வீடு சம்பந்தமான சொத்துக்கள் குறித்து எந்த உயிலும் எழுதவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 28.02.1992ல் என் தகப்பனார் வீட்டு மனை மற்றும் வீடு சம்பந்தமான சொத்துக்கள் குறித்து ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த உயிலில் நானும் ஒரு தரப்பினர் என்ற விவரமும் தெரியாது. நான் என் தகப்பனாருடன் தான் இருந்தேன். என் தகப்பனார் அவர் வாழ்ந்த காலத்தில் என்னென்ன ஆவணங்கள் ஏற்படுத்தினார், ரத்து செய்தார் ஆகிய விவரங்கள் குறித்து எனக்கு ஓரளவிற்கு தான் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படுகின்ற ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் முதல் பெயராக என்னுடைய பெயரும், சந்திரசேகர், மோகன்தாஸ், சம்பத், துரை (எ) துரைராஜ் ஆகிய ஐவருக்கும் உயில் எழுதப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் தெரியாது. தமிழ் படிக்க தெரியும். மேற்படி உயில் ஆவண எண்.7/92 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1975ல் ஏற்பட்ட பாகபிரிவினையில் உள்ள வாசகங்களின் விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

**<u>1 மற்றும் 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

என் தகப்பனார் உயில் எழுதி வைத்த தேதி 13.03.1997. 13.03.1997ல் எழுதப்பட்டதாக சொல்லப்படும் உயிலின் ஆவண எண்.12. அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சாராம்சங்கள் நன்றாக தெரியும். என் தகப்பனார் இறந்த பிறகு மேற்படி உயில் என்னுடைய பராமரிப்பில் தான் இருந்தது. அதனை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த உயிலில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை நான் படித்து பார்த்தேன். அந்த உயிலில் 1996ல் ஏற்கனவே ஒரு உயில் எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். அதன் ஆவண எண், உயில் எப்பொழுது எழுதப்பட்டது என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது. அந்த உயில் யார் யாருக்காக எழுதப்பட்டது என்ற விவரம் பற்றி எனக்கு தெரியும். இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி ஜெயபிரகாஷ், 6ம் பிரதிவாதி மோகன்தாஸ், 2ம் பிரதிவாதி சம்பத் என்கிற துரைராஜ் மற்றும் வாதியாகிய எனக்கும் எழுதப்பட்ட உயில் ஆகும். 1996ம் வருடம் எழுதப்பட்ட உயில் பற்றி நான் எனது வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 1996ம் வருடம் எழுதப்பட்ட உயில் நடைமுறையில் இருந்ததா அல்லது ரத்து செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1997ல் எழுதப்பட்ட உயில் மூலம் 1996ல் எழுதப்பட்ட உயில் ரத்து செய்யப்பட்டது. 1996ல் எழுதப்பட்ட உயில் ரத்து செய்யப்பட்டது சம்பந்தமாக தனியாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி எனக்கு எழுதப்பட்ட 1997 உயிலில், 1989ல் என் தகப்பனார் என்னையும், என்னுடைய மற்ற சகோதரர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை ஒரு குடும்ப ஏற்பாட்டிற்காக அழைத்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.4 உயில் என் பெயரில் என் தகப்பனார் எழுதியது என்றால் சரிதான். அந்த உயிலில் பக்கம் 2, 4வது வரியில், "எனது குடும்பத்தினரை கடந்த 1989ம் வருடத்தில் வரவழைத்து குடும்ப பஞ்சாயத்து முன்னிலையில் பேச வேண்டி மேற்படி கோவிந்தராஜியை அழைத்தபோது அதில் அவர் வந்து கலந்து கொள்ள மறுத்து விட்டார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவிந்தராஜ் வராததால் அந்த குடும்ப ஏற்பாடு மீட்டிங் நடைபெறவில்லை. 1989ல் கோவிந்தராஜ் தவிர மற்ற குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு, வீடு மற்றும் சொத்து சம்பந்தமாக ஒரு

குடும்ப ஏற்பாடு பஞ்சாயத்தார் முன்னிலையில் ஏற்பட்டு கையொப்பம் இடப்பட்டது என்றால் அது சரியல்ல. அந்த குடும்ப ஏற்பாட்டில் நானும் கலந்து கொண்டு ஒரு தரப்பினராக இருந்து அதில் கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் தெரியவில்லை. என் அப்பா கேட்டால் கையொப்பம் இடுவோம். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.438/2006ல் மேற்படி குடும்ப ஏற்பாட்டினை ஒரு ஆவணமாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**1 மற்றும் 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1997ல் எனது பெயரில் எழுதப்பட்ட உயிலில் எனது தாயார் இந்திராணி அம்மாளை பற்றி எந்த விவரமும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் மதுரைமுத்து நாயக்கர் இறக்கும் வரை எனது தாயார் இந்திராணி அம்மாள் அவருடன் தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். இந்திராணி அம்மாள் தான் என் தகப்பனாரை பார்த்து வந்தார் என்றால் என் தாயார் என் தகப்பனாரை கவனிக்கவில்லை. நான் தான் என் தகப்பனாரை கவனித்து வந்தேன். என் தாயார் இந்திராணி அம்மாள் பாகப்பிரிவினை கோரி இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் தாயார் என் தகப்பனாருடன் வாழ்ந்து வந்ததால் குடும்பத்தில் நடந்த விவரங்கள் பற்றி ஓரளவிற்கு தெரியும். பாகப்பிரிவினை வழக்கு என் மீது தான் போடப்பட்டுள்ளது என்றால் என் பெயரில் மட்டும் அல்லாது என் 4 சகோதரர்கள் மீதும் போடப்பட்டுள்ளது. 1975ம் ஆண்டு செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் சர்வே எண்.156/2 மற்றும் 37/7 ஆகிய சொத்துக்கள் உயிலில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.156/2 என்ற சொத்து வீட்டு மனை சொத்து. சர்வே எண்.156/2 சொத்தின் ஒரு பகுதி தேசிய நெடுஞ்சாலை துறையால் கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அந்த கையகப்படுத்திய பகுதிக்கு இழப்பீடாக ஒரு சென்டிற்கு ரூ.250/- வீதம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த இழப்பீடானது என் தகப்பனார் மதுரைமுத்து நாயக்கருக்கும், எனக்கும் எனது சகோதரர்களுக்கும் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இழப்பீடு என் தகப்பனார் மட்டும் தான் வாங்கினார். அரசாங்கத்தால் மற்ற சகோதரர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படும் அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட அறிவிப்பில் மற்ற பிரதிவாதிகளின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.156/2 சொத்து மூதாதையர் சொத்து என்றால் இல்லை. என் தகப்பனாரின் அனுபவத்தின் பெயரில் பட்டா வாங்கப்பட்டது. வா.சா.ஆ.3 ஆவணம் என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் மதுரைமுத்து நாயக்கர் மற்றும் அவரது பிள்ளைகள் பெயரில் உள்ளதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்கள் 156/2, 82/1, 82/2, 39/2பி ஆகிய நான்கு சர்வே எண்களும் 1997ல் எழுதப்பட்டதாக சொல்லப்படும் உயிலில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களில் உள்ள சொத்துக்கள் அனைத்தும்

என் பெயரிலும், என் சகோதரர்கள் பெயரிலும் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஏற்பட்ட வருடம் 1975 என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ.3 வழங்கப்பட்ட தேதி 09.04.1979 என்றால் நான் இந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. (சாட்சி மீண்டும்) மேற்படி வா.சா.ஆ.3 ஆவணம் நான் தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி 156/2, 82/1, 82/2, 39/2பி ஆகிய நான்கு சர்வே எண்களும் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றும், ஆகவே ஒரு நபருக்கு மட்டும் எழுதி வைக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண்.156/2 சொத்தானது எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றும், நான் எனது வழக்குரையில் எந்த இடத்திலும் என் தகப்பனார் ஆண்டு அனுபவித்து பட்டா பெறப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனது கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில், உண்மையை மறைத்து என் தகப்பனாருக்கு புறம்போக்கு நிலத்திற்கு அனுபவத்தின் பேரில் பட்டா கிடைத்ததாக சட்டத்திற்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்.156/2ல் உள்ள சொத்துக்கள் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் சொந்தமான சொத்து என்பதால் தான் எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் கையகப்படுத்தப்பட்ட இடத்திற்கு நஷ்டஈடாக இழப்பீடு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் வழக்குரை பத்தி 6ல், சர்வே எண்.156/2ல் உள்ள சொத்தில் ஒரு கான்கீரிட் வீடு என் தகப்பனாரால் கட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது கூடுதல் பிரமாண வாக்குமூலம் பத்தி 9ல் "சர்வே எண்.156/2ல் உள்ள சொத்து ஆதியில் புறம்போக்கு இடமாகவும், அதன் பின்பு நானும் என் தகப்பனாரும் சேர்ந்து தளம் போட்ட வீடாக கட்டியுள்ளோம்" என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்கு சொத்துக்களும், என் தாயார் மற்றும் மற்ற பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பாகப்பிரிவினை வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களும் மூதாதையர் சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள தாவா சொத்துக்கள் என் தந்தையார் பாகத்திற்கு வந்த சொத்துக்கள். என் தந்தைக்கு வந்த பாக சொத்து அவரது தந்தையார் வீரப்பன் நாயக்கரின் சொத்து. அந்த வீரப்பன் நாயக்கர் என்பவர் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் தாத்தா என்றால் சரிதான். அவர் சம்பாதித்த சொத்துக்களை தான் 1975ல்

என் தகப்பனார் மற்றும் நாங்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டு குடும்பமாக அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். 04.10.2006ல் என் தகப்பனார் இறக்கும் வரை நாங்கள் எல்லோரும் கூட்டாக தான் அனுபவித்து வந்தோம் என்றால் இல்லை. அவரவருக்கு திருமணம் ஆகும் வரை தான் கூட்டாக அனுபவித்து வந்தோம். 04.10.2006 வரை எங்கள் குடும்பத்தில் யாருக்கு திருமணம் நடைபெறவில்லை என்றால் ஒரு நபரை (சந்திரசேகர்) தவிர மற்ற எல்லோருக்கும் என் தகப்பனார் இறக்கும் போது திருமணம் ஆகியிருந்தது. சந்திரசேகர் என் கடைசி தம்பியா என்றால் அவர் 4வது தம்பி. கடைசி தம்பி சம்பத் என்கிற துரைராஜ். சம்பத் என்கிற துரைராஜ்க்கு எனக்கு பிறகு திருமணம் ஆகிவிட்டது. மேற்படி சந்திரசேகர் திருமணம் ஆகாததால் என்னுடனும் என் தகப்பனார் உடனும் கூட்டாக இருந்தார் என்றால் இல்லை. அவர் எங்கு இருந்தார் என்றால் அவர் ஓடி போய்விட்டார். என் தகப்பனார் இறக்கும் போது என் தாயார் இந்திராணி அம்மாள் அவருடன் தான் இருந்தார் என்றால் சரிதான். என் அப்பா இறந்த பிறகு அவருடைய ஈமசடங்குகளை நான் என் தாயார் மற்றும் சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து தான் செய்தோம் என்றால் அவர்கள் கலந்து கொண்டார்கள். நான் தான் செலவுகளை செய்தேன். ஈமசடங்குகளை சம்பத் என்கிற துரைராஜ் தான் செய்தாரா என்றால் ரவுடீசம் செய்து அவர் தான் செய்தார். ஆனால் அதற்கு மாறாக எனது வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் என் தகப்பனாரின் இறுதி சடங்குகளை நான் தான் செய்தேன் என்றும், பிரதிவாதிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றும், சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**1 மற்றும் 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

என் தகப்பனார் இறந்த போது இறுதி சடங்குகளுக்கான செலவுகளை நான் செய்ததாக சொல்வது தவறு என்றும், இறுதி சடங்குகளுக்கான செலவுகளை பொது பணத்திலிருந்து சம்பத் என்கிற துரைராஜ் தான் செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் என் தகப்பனார் இறுதி சடங்கில் கலந்து கொள்ளாமல் வீட்டிலிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே நடந்த குறுக்கு விசாரணையில், "ஈமசடங்குகளை சம்பத் என்கிற துரைராஜ் தான் செய்தாரா என்றால் ரவுடீசம் செய்து அவர் தான் செய்தார்". என்று சொல்லியிருப்பது தவறு என்றும் அதற்கு மாறாக நான் தான் இறுதி சடங்கு என்றும் பாராமல் ரவுடிசம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிளை அஞ்சலக அதிகாரியாக பணியாற்றினேன். அந்த சமயத்தில் சுமார் நான் ரூ.10,000/. ஊதியம் பெற்றேன். எனக்கு இரு பெண் குழந்தைகள், ஒரு ஆண் குழந்தை உள்ளது. என் தகப்பனார் இறந்த சமயத்தில் நானும் என் மகனும் வேலையில் இருந்தோம். என் மகன் கார் கம்பெனியில் வேலை பார்த்தார் அவர் ரூ.15,000/. ஊதியம் பெற்றார். மேற்படி வருமானம் நீங்கலாக விவசாய வருமானம் இருந்தது. இரண்டு பவர் டில்லர் வாடகை விட்டு அதன் மூலம் வருமானம் பெற்றேன். மேற்கண்ட வருமான விவரங்கள் என்னுடைய அதிகாரிக்கு தெரியும். என் தகப்பனார் மதுரை முத்து உயிருடன் இருந்த காலத்திலேயே என் இரு மகள்களுக்கும் திருமணம் நடந்து விட்டது. அந்த இரு மகள்களுக்குமே 50 சவரன் நகை

போட்டு வெகு விமரிசையாக திருமணம் நடந்தது என்று சொன்னார் 30 சவரன் நகை மட்டும் போடப்பட்டது. நானும் என் சகோதரர்களும் சேர்ந்து தான் என் மகள்களின் திருமண ஏற்பாட்டை செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் நாங்கள் எல்லோரும் கூட்டு குடும்பமாக இருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல எனக்கு அவ்வளவு வருமானம் இல்லையென்றும் எனக்கு சொற்ப வருமானம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் குறைவான வருமானம் என்பதால் என் தகப்பனார் மதுரை முத்து என் சகோரர்களின் சம்மதத்தின் பேரில் என் மகள்களின் திருமணத்தை செலவு செய்து நடத்தி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. என் இரு மகள்களின் திருமணத்தின் போது நான் சொன்னது போல் என் மகன் வேலை ஏதும் பார்க்கவில்லை என்றும், அதன் மூலம் மாத வருமானம் ரூ15,000/. பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் என் மகள்களின் திருமணத்தில் என் தகப்பனார் செலவு செய்தார என்றால் இல்லை. அந்த சமயத்தில் என் தகப்பனார் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். என் முதல் மகளின் திருமணம் நடந்த வருடம் தோராயமாக கூட ஞாபகமில்லை. என் இரண்டாவது மகள் திருமண வருடமும் எனக்கு ஞாபமில்லை. என் மூத்த மகளுக்கு ஒரு ஆண் குழந்தை. 10 வது படிக்கிறான். அந்த ஆண் குழந்தையின் வயது 15 இருக்குமா என்றால் பிறந்த தேதி தெரியாது. எனக்கு என் மகள்களின் திருமணமான ஆண்டு மற்றும பேரனின் வயது எனக்கு தெரியும் என்றும், அவைகளை சொன்னால் உண்மை வெளிப்பட்டு விடும்

என்பதால் தான் அதனை மறைத்து தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயில் சம்பந்தமாக என் தாயாருக்கு உயில் எழுதிய தேதியிலிருந்தே தெரியும். இந்த உயில் சம்பந்தமாக என் தந்தையார் என் தாயாரோடு ஆலோசித்தாரா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி உயிலை குறித்து பிரதிவாதிகளுக்கு தெரியுமா என்றால் என் தகப்பனார் இறப்பதற்கு முன்பே சொல்லியிருக்கிறார். மேற்படி விவரத்தை நான் எனது வழக்குரையிலோ

பிரமாண வாக்குமூலத்திலோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்பிலோ குறிப்பிட்டிந்தார் என்றால் இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**1 மற்றும் 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

பாகப்பிரிவினை கோரியும், 1997ம் ஆண்டு உயிலை ரத்து செய்யவும் அசல் வழக்கு எண்.438/2006 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு உயில் எழுத உரிமை இல்லை என்றும், அதனால் அதை ரத்து செய்ய வேண்டுமென்றும் மேற்சொன்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. 1975ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையின் படி வழக்கு சொத்து என் தகப்பனாருக்கு "ஏ" அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அவை விவசாய நிலம் மற்றும் வீடு சார்ந்த நிலங்கள் என்றால் சரிதான். சொத்துக்கள் அனைத்தும் மூதாதையார் சொத்துக்கள் என்றால் சரியல்ல, சில சொத்துக்கள் என் அப்பா வாங்கிய சொத்துக்கள். தாவா சொத்துக்களில் ஒரு சொத்து மட்டும் என் தகப்பனார் சுயமாக வாங்கிய சொத்து. மற்ற சொத்துக்கள் பாகப்பிரிவினையில் என் அப்பாவிற்கு கிடைத்த சொத்துக்கள். அந்த ஒரு சொத்து சம்பந்தமாக கிரய ஆவணமோ, பட்டாவோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

அந்த சொத்து என் அப்பாவிற்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சொத்து. அதன் சர்வே எண்.156/2. அந்த சொத்து எந்த வருடம் வாங்கப்பட்டது என்று என் அப்பாவிற்கு தான் தெரியும், அவர் இறந்து போய் விட்டார். என் அப்பா பெயரிலுள்ள பட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டா தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.3 என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 1388 பசலி காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சர்வே எண்.156/2 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதுரை முத்து நாயக்கர் மற்றும் அவரது வகையறா என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டாவில் மேற்படி 156/2 சர்வே எண்ணிற்கு பசலி 1396ன் படி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் என் அப்பா பெயருக்கு மேற்சொன்ன இடம் புறம்போக்கு இடம் என்று சொல்லி என் அப்பாவிற்கு கொடுக்கப்பட்டு என் அப்பா அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. சொத்து எங்கள் மூதாதையர் சொத்து என்றாலும், என் அப்பாவிற்கு தனிப்பட்ட உரிமை எதுவும் கிடையாது என்று சொன்னாலும் சரியல்ல. சர்வே எண்.156/2, வழக்கு சொத்துக்களாக சொல்லப்பட்டுள்ள மற்ற சர்வே எண்களில் உள்ள சொத்துக்களிலும் ஒரு பகுதி அரசாங்கத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அரசாங்கத்திலிருந்து நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்காக நஷ்டஈடு

எனக்கும், இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கும் தனித்தனியாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்தில் அவர்களுக்கும் உரிமை இருந்ததால் அவர்களுக்கும் தனித்தனியாக இழப்பீட்டு தொகை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருந்த போது சொத்தின் ஒரு பகுதியை BSNL டவர் அமைப்பதற்கு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த டவர் தற்போதும் உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருந்த வரை அந்த வாடகையை வாங்கி வந்தார் என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு வாடகையை எனக்கு தர வேண்டுமென நான் கேட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளும் அவர்களுக்குரிய தொகையை வாடகையாக கொடுக்க வேண்டுமென்று மனுவாக கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

வழக்கு நிலுவையில் இருப்பதால் அது முடியும் வரை வாடகையை கொடுக்க முடியாது என BSNL நிர்வாகம் என்னிடம் கூறிவிட்டது என்றால் சரியல்ல. இந்த டவர் வாடகை சம்பந்தமாக தற்போதும் அசல் வழக்கு எண்.283/2017 செங்கல்பட்டு முன்சீப் கோர்ட்டில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். BSNL தான் பிரதிவாதி. BSNL எதிர் வழக்குரை தாக்கல் செய்து விட்டது. எதிர் வழக்குரையில் இந்த வழக்கு பிரதிவாதிகளையும் கட்சி சேர்க்க வேண்டுமென BSNL கூறியுள்ளது பற்றி எனக்கு தெரியாது. நான் அந்த எதிர்வழக்குரை பற்றி தெரிந்து கொள்ளவில்லை. நான் எனது வக்கீல் மூலமாகவும் அது பற்றி தெரிந்து கொள்ளவில்லை. சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான் நான் மேற்சொன்ன அசல் வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதிகளை பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. BSNL நிறுவனம் இந்த வழக்கின் பிரதிவாதிகளை கட்சி சேர்க்க வேண்டுமென மனு போட்டது என்றால் சரிதான். தற்போது இந்த வழக்கின் பிரதிவாதிகளும் அந்த வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு அந்த வழக்கு சொத்தில் உரிமை இருந்தததால் தான் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. உயிலின் அடிப்படையில் தாவா சொத்து சம்பந்தமாக நான் எந்த உரிமையும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாருக்கு அவ்வாறு உயில் எழுதி வைப்பதற்கு எந்தவித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் மூதாதையர் சொத்து என்றாலும், வாதி, பிரதிவாதிகளுக்கு

பொதுவான சொத்து என்று சொன்னாலும் சரியல்ல.

04.10.2006ல் தான் எனது தகப்பனார் இறந்துபோனார் என்று சொன்னால் சரிதான். அவர் இறக்கும் வரை நானும் பிரதிவாதிகள் அனைவரும் ஒன்றாக இருந்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பாக வழக்கில் அவர்கள் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனக்கு அனுப்பப்பட்ட சம்மனோடு வந்த வழக்குரையில் ஆவணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அந்த வழக்குரையோடு நான் குடியிருக்கும் விலாசத்தில் உள்ள பிரதிவாதிகளின் குடும்ப அட்டை, தேர்தல் அடையாள அட்டை, போன் பில் ஆகியவற்றை காண்பித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறக்கும் வரை நாங்கள் எல்லோரும் கூட்டு குடும்பமாக வழக்கு சொத்தில் குடியிருந்தோம் என்றாலும், தற்போது வழக்கிற்காக குடியிருக்கவில்லை என்று சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. அவர் இறந்த பிறகு உயிலை பயன்படுத்தி எனது தாய் மற்றும் சகோதர, சகோதரிகளை வீட்டை விட்டு விரட்டி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இறப்பிற்கு பிறகு தான் சண்டை நடந்தது. சண்டையை பயன்படுத்தி வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் என் தாயாரிடமிருந்து நான் எடுத்து போய் விட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

என் தகப்பனார் உயிரோடு இருந்த வரையில் அவரை நான் மட்டும் தான் பராமரித்தேன் என்றாலும், பிரதிவாதிகள் அவரை பார்த்து கொள்ளவில்லை என்றும் நான் வழக்குரையில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அம்மா இறக்கும் வரை இந்த வழக்கின் பிரதிவாதிகளோடு தான் இருந்து வந்தார் என்றால் சரிதான். 05.05.2020ல் என் அம்மா இறந்து போய் விட்டார். அவர் இறப்பிற்கு நான் போகவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் இறக்கும் வரை அவரோடு தான் என் தாயார் இருந்தார். என் தாய் என் தகப்பனாரை பார்த்து கொண்டார் என்றால் சரிதான். சாட்சி தாய், தகப்பனார் இருவரையும் நான் தான் பார்த்து கொண்டதாக சொல்கிறார். நான் அவ்வாறு கவனிக்கவில்லை என்றாலும், பிரதிவாதிகள் தான் எங்கள் பெற்றோர்களை கவனித்து கொண்டார்கள் என்று சொன்னாலும் சரியல்ல. நான் சொத்துக்கள் மீதே குறியாக இருந்தேன் என்றும், அதனால் தான் என் தாயார் பாகம் கேட்டு என் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா என் மீது குற்றவியல் வழக்கும் கொடுத்தார். அந்த அளவிற்கு நான் என் அம்மாவிற்கு மன உலச்சல் கொடுத்தேன்

என்று சொன்னால் சரியல்ல.

எனது தாயாரும், பிரதிவாதிகளும் வழக்கு சொத்துக்களில் வந்து பிரச்சனை செய்தார்கள் என்று நான் சொல்லியுள்ளேன். எந்த தேதியில் எந்த பிரதிவாதி வந்து பிரச்சனை செய்தார் என்று குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் துறையில் புகார் கொடுத்துள்ளேன். கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய வக்கீலுக்கு நான் தான் விவரம் கூறினேன். நான் கூடுதல் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள 23.11.2006 தேதியிட்ட அறிவிப்பின் நகலோ, அதை அனுப்பியதற்கான விவரமோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 17.11.2006ல் 1ம் பிரதிவாதியின் மகன் திரவியத்திற்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். ரவிசந்திரன் என்ற வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்டது. அதே தேதியில் 2, 4 பிரதிவாதிகளுக்கும் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். 23.11.2006ல் நான் அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

கோவிந்தராஜ் மகன் திரவியம் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை. 3ம் பிரதிவாதி மீது மண்ணெண்ணெய் ஊற்றி கொலை செய்ய முயற்சித்தேன் என்று வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. அந்த வழக்கும் நான் அவர் மீது கொடுத்த வழக்கும் செங்கல்பட்டு நீதித்துறை நடுவர் எண்.2ல் நடந்தது என்றால் சரியல்ல. அவ்வாறு வழக்கு நடந்தது என்றாலும், நடக்கவில்லை என்று இந்த வழக்கிற்காக கூறுகின்றேன் என்று சொன்னாலும் சரியல்ல. சர்வே எண்.156/2ல் ஒரு பகுதியில் வீடு கட்டி நான் அனுபவித்து வந்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வீடு எங்கள் இடத்தை ஆர்ஜிதம் செய்ததற்காக கொடுக்கப்பட்ட பணத்திலிருந்து கட்டப்பட்ட வீடு என்று சொன்னால் சரியல்ல. 156/2ல் உள்ள சொத்து என் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து என இந்த வழக்கிற்காக கூறுகின்றேன் என்று சொன்னாலும் சரியல்ல.

ஜே.சி.பி. வாகனம் கொண்டு வந்து மரங்களை பிடிங்கினார்கள் என்றும், என் வீட்டை இடிப்பது போல் மிரட்டினார்கள் என்றும், நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த பிரதிவாதி, எத்தனை மணிக்கு, எந்த பதிவெண் கொண்ட ஜே.சி.பி. கொண்டு வந்து அவ்வாறு செய்தார் என்று நான்

குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை வழக்கில் சொல்லப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் உண்மை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து என் அப்பாவின் தனிப்பட்ட சொத்து இல்லை என்றாலும், அந்த சொத்தில் எனக்கு என்ன உரிமை உள்ளதோ, அதே அளவு உரிமை பிரதிவாதிகளுக்கும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் என் அப்பா எழுதியதாக சொல்லப்படும் உயில் செல்லத்தக்கதல்ல என்றாலும், அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னாலும் சரியல்ல. அந்த உயிலின் அடிப்படையில் எனக்கு எந்தவித உரிமையோ, பாகமோ கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அந்த உயிலின் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அவர்கள் எந்தவித இடையூறும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் நான் கோரிய எந்தவித பரிகாரமும் இந்த வழக்கில் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மின்சார அட்டை, மின்சார ரசீது ஆகியவை என் அப்பா பெயரில் உள்ளவை என்றால் சரிதான். 20 ஆண்டுகளாக நான் சொத்துக்களை அனுபவித்து வந்ததற்காக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் ஆவணங்கள் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (2ம் பிரதிவாதி தரப்பில்):-</u>**

(கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக 07.01.2022க்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

**வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை (2ம் பிரதிவாதி தரப்பில்):-**

அசல் வழக்கு எண். 524/2008 என்பது முன்சீப் கோர்ட்டில் நிரந்தர தடை உத்தரவு கேட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். இந்திராணி அம்மாள் என்பது எனது தாயார். 1 முதல் 4 பிரதிவாதிகள் எனது சகோதரர்கள். இந்த வழக்கு பிரதிவாதிகள் 6 நபர்களும் என் மீது பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து அது அசல் வழக்கு எண். 438/2006 என நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இரண்டு வழக்குகளிலும் சம்பந்தப்பட்டது ஒரே சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் எனது தாயார் இந்திராணி, சகோதரிகள் ராஜேஸ்வரி, அனுசியா, கௌரி ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை எனது தாயார் அசல் வழக்கு எண். 438/2006ல் தரப்பினர்களாக சேர்த்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் மதுரை முத்து நாயக்கர் என்றால் சரிதான். அவர் தபால் துறையில் பணிபுரியவில்லை. நான் தபால் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். 24.10.1975ல் எதிர் வழக்குரையில் கூறியுள்ளவாறு ஊரப்பாக்கம் மற்றும் ஐயஞ்சேரி கிராமத்திலுள்ள எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள 82/1, 82/2, 159/A/2B, 166/2, 162/1 மற்றும் 35/2, 39/2B, 50/1, 84/2 ஆகியவை மேற்சொன்ன தேதியிட்ட பாகப்பிரிவினையில் தரப்பினர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சில சொத்துக்கள் பாகத்தில் பிரிக்கப்படவில்லை. அவை பூர்விக சொத்துக்கள் இல்லை என்பதால் பிரிக்கப்படவில்லை.

அசல் வழக்கு எண். 438/2006ல் உள்ள வழக்கு சொத்துக்கள் அனைத்தும் 1975 பாகத்தில் எனது தகப்பனாருக்கு "A" அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். நம்பர் 17, GST ரோடு, ஊரப்பாக்கம் என்ற சொத்தும் மேற்சொன்ன பாகத்தில் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது. 23.04.1987ல் சாலை விரிவாக்கத்திற்காக என்

அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் நிலஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான்,



மற்ற பாகஸ்தர்கள் சொத்தும் நிலஆர்ஜிதம் செய்யப்பட்டது. நிலஆர்ஜிதத்திற்காக வந்த பணத்தை வைத்து GST ரோட்டிலிருந்த வீட்டிற்கு தளம் போடப்பட்டது என்றால் சரியல்ல. வீரபத்திர நாயக்கர் என்பவர் எனது தாத்தா, ஞானாம்பாள் எனது பாட்டி. அவர் உயிருடன் இருந்த வரை சொத்துக்களை பராமரித்து வந்தார் என்றால் சரிதான்.

எனது தகப்பனார் 04.10.2006ல் இறந்துபோய் விட்டார் என்றால் சரிதான். அனைவரும் கூட்டாக தான் இறப்பு காரியங்களை செய்தார்கள் என்றாலும், நான் மட்டும் செய்தேன் என்று தவறாக கூறுகின்றேன் என்று சொன்னாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி தான் காரியம் செய்தார் என்றால் தவறு. எங்களில் மூத்தவர் கோவிந்தராஜ் என்றால் சரிதான். 1989ல் குடும்ப ஏற்பாடு நடந்ததாக சொன்னால் தவறு. புல எண்.82/1, 82/2, 159/A/2B ஆகியவை 24.09.1989 தேதிய குடும்ப ஏற்பாட்டின் படி பிரித்து கொள்வதாக பேசப்பட்டது என்றாலும், பின்னர் பிரிக்கப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. பிரிக்கப்படாததால் தான் அவை அசல் வழக்கு எண்.438/2006ல் "B" அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி 1975ம் வருட பாகப் பிரிவினையில் மேற்சொன்ன 3 சொத்துக்களும் காட்டப்பட்டுள்ளது என்று கூறுகிறார்.

GST ரோட்டிலுள்ள சொத்தில் தான் என் தகப்பனாரும் நாங்களும் வாழ்ந்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.11 ஆகிய அறிவிப்புக்களை நான் அவர்கள் பாகப்பிரிவினையில் உள்ள சொத்துக்களில் நுழைய முற்பட்டதால் அனுப்பினேன். வா.சா.ஆ.4 உயிலில் ஏற்கனவே எழுதப்பட்ட 09.12.1996ம் தேதிய உயிலை ரத்து செய்வதாக என் அப்பா குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 28.02.1992ல் என் அப்பா கிருஷ்ணன், ஜெயபிரகாஷ், சந்திரசேகரன், மோகன்தாஸ், சம்பத் என்கிற துரைராஜ் ஆகிய ஐவருக்கும் ஒரு உயில் எழுதிக் கொடுத்தார் என்று சொல்வது பற்றி எனக்கு தெரியாது. 09.05.1996ல் என் அப்பா கிருஷ்ணன், ஜெயபிரகாஷ், மோகன்தாஸ், சம்பத் என்கிற துரைராஜ் ஆகிய நால்வருக்கும் ஒரு உயில் எழுதிக் கொடுத்தார் என்று சொல்வது பற்றி

எனக்கு தெரியாது. இந்த உயில் தான் வா.சா.ஆ.4 மூலம் ரத்து செய்யப்பட்டது என்றால்



சரிதான். வா.சா.ஆ.4ல் 1992ம் வருடத்திய உயிலை ரத்து செய்வதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 உயிலை எழுதுவதற்கு என் தகப்பனாருக்கு அருகதை இல்லை என்றாலும், சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்றாலும், கூட்டு அனுபவத்தில் இருந்தவை என்று சொன்னாலும் சரியல்ல.

வா.சா.ஆ.4 உயில் முன்சீப் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்வதற்காக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உயில் எழுதிய காலத்தில் என் அப்பாவின் உடல்நிலை, மனநிலை ஆகியவை சரியில்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. அதனை பயன்படுத்தி வா.சா.ஆ.4 உயிலை போலியாக தயார் செய்தேன் என்றாலும், அது செல்லத்தக்கதல்ல என்று சொன்னாலும் சரியல்ல.

புல எண்.159/A உள்ள சொத்திற்கு மட்டும் தான் நான் பட்டா வாங்கியுள்ளேன். பிறகு சொத்துக்களுக்கு பட்டா வாங்கவில்லை. மற்ற சொத்துக்களுக்கு தற்போது என் அப்பா பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்களுக்காக முன்சீப் நீதிமன்றத்தில் BSNL நிறுவனத்தை பிரதிவாதியாக காண்பித்து ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். BSNL அந்த வழக்கில் டவர் போட்டிருந்தார்கள் என்றும், அதை காலி செய்ய வேண்டுமென்றும் பரிகாரம் கோரியிருந்தேன். எதிர் வழக்குரையில் மற்ற பாகஸ்தர்களையும் தரப்பினர்களாக சேர்க்க வேண்டுமென்று BSNL கூறியிருந்தது என்றால் சரிதான். நான் மற்ற பாகஸ்தர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. BSNL நிறுவனமே சேர்த்து விட்டது.

அசல் வழக்கு 524/2008ல் கண்டுள்ள சொத்துக்களை பொறுத்து அனைத்து குடும்ப உறுப்பினர்களும் பாகஸ்தர்கள் என்றாலும், அது கூட்டு குடும்ப சொத்து என்றாலும் சரியல்ல. சொத்துக்களில் எனக்கு தனிப்பட்ட உரிமை ஏதுமில்லை என்றாலும், அதன் சுவாதீனத்தில் நான் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. எனது சகோதரர்கள்

எந்த நேரத்தில் எனது அனுபவத்தை இடையூறு செய்தார்கள் என்று குறிப்பிட்டு வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல, வக்கீல் அறிவிப்பில் கூறியுள்ளேன். அசல்



வழக்கு எண்.524/2008ல் உள்ள சொத்துக்களும் பாகப்பிரிவினைக்கு ஏற்கனவே உட்படுத்தப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. அதனால் அசல் வழக்கு எண்.524/2008ல் எனக்கு எந்த பரிகாரங்களும் கிடைக்கத்தக்கதில்லை, அது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றாலும், அசல் வழக்கு எண்.438/2006 அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொன்னாலும் சரியல்ல.

**மறு விசாரணை:-**

இல்லை

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் - O.S.524/2008 P.W.2**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜி | தொழில்: | |
| த/பெ.: | | மதம்: | |
| கிராமம்: | | ஜாதி: | |
| வயது: | | வட்டம்: | |

**முதல் விசாரணை: - 21.02.2022**

நான் இந்த வழக்கில் மூன்றாம் தரப்பினர். இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.4 உயிலில் உள்ள இரண்டாவது சாட்சி என கையெழுத்திட்டுள்ளது நான் தான்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்):-**

(கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக 28.02.2022க்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.524/2008** **P.W.2-** ராஜி 11.03.2022

**<u>குறுக்கு விசாரணை (அனைத்து பிரதிவாதிகள் தரப்பில்):-</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>**

இல்லை

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் - OS.No.524/2008 D.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஜெயபிரகாஷ் | தொழில்: | |
| த/பெ.: | | மதம்: | |
| கிராமம்: | | ஜாதி: | |
| வயது: | | வட்டம்: | |

**முதல் விசாரணை: - 18.03.2022**

நான் அசல் வழக்கு எண் 438/2006ல் நான்காம் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். இதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 19 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 24.10.1975 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஆவண எண்.4179/1975 சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1.

2. 23.04.1987 தேதியிட்ட 2 முதல் 6 வாதிகளுக்கு, 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு தனி வட்டாட்சியர் அவர்கள் கொடுத்த அறிவிப்பு ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.2.

3. கிராம அடங்கல் அசல் பி.சா.ஆ.3.

4. 04.10.2006 தேதியிட்ட மதுரைமுத்து நாயக்கரின் இறப்பு சான்று அசல் பி.சா.ஆ.4.

5. 17.11.2006 தேதியிட்ட முதல் பிரதிவாதிக்கு வழக்கறிஞரால் அனுப்பப்பட்ட அறிவிப்பு அலுசலக நகல் பி.சா.ஆ.5.

6. 25.11.2006 தேதியிட்ட காவல் அலுவலகத்தில் 2ம் வாதி கொடுத்த புகார் மனு அலுவலக நகல் பி.சா.ஆ.6.

7. 25.11.2006 தேதியிட்ட புகார் ஏற்பு சான்றிதழ் அசல் பி.சா.ஆ.7.

8. முதல் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.524/2008 ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.8.

9. அசல் வழக்கு எண்.524/2008 வழக்கில் இரண்டாம் வாதியால் போடப்பட்ட எதிர் வழக்குரை ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.9.

10. 1998-2003 தேதிக்கான மதுரைமுத்துவின் குடும்ப அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.10.

11. 2005-2009 தேதிக்கான மதுரைமுத்துவின் குடும்ப அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.11.

12. 2005-2009 தேதிக்கான 2ம் வாதியின் குடும்ப அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.12.

13. 08.12.1976 தேதியிட்ட 3ம் வாதியின் வங்கி சேமிப்பு கணககு புத்தகம் அசல் பி.சா.ஆ.13.

14. 14.12.1983 தேதியிட்ட 4ம் வாதியின் வங்கி சேமிப்பு கணககு புத்தகம் அசல் பி.சா.ஆ.14.

15. 3ம் வாதியின் ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.15.

16. 6ம் வாதியின் ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.16.

17. 04.12.2006 தேதியிட்ட வட்டாட்சியர் அவர்களுக்கு வழக்கறிஞரால் அனுப்பப்பட்ட அறிவிப்பு அலுவலக நகல் பி.சா.ஆ.17.

18. 24.09.1989 தேதியிட்ட வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட குடும்ப ஏற்பாடு ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.18.

19. 13.03.1997 தேதியிட்ட மதுரைமுத்து நாயக்கர் முதல் பிரதிவாதி கிருஷ்ணன் பெயருக்கு எழுதிழ கொடுத்த உயில் சாசனம் ஜெராக்ஸ் நகல் பி.சா.ஆ.19.

தாவா தள்ளுபடி ஆக வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்):-</u>**

(கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக 08.04.2022க்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

**OS.No.524/2008 D.W.1-ஜெயபிரகாஷ் 15.06.2023**

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

மதுரை முத்து நாயக்கர் என்னுடைய அப்பா என்றால் சரிதான். எனது தந்தை தான் குடும்ப சொத்துக்களை கர்த்தா என்ற முறையில் பார்த்து வந்தார் என்றால் சரிதான். 20.10.1985ல் ஊரப்பாக்கம் சொத்துக்கள் மற்றும் ஐய்யஞ்சேரி சொத்துக்களை பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் முன்னிலைக்கு மதுரை முத்து நாயக்கர், கோவிந்தராஜ், கிருஷ்ணன், விஜயகுமார், ஜெயபிரகாஷ், சந்திரசேகர், மோகன்ராஜ், சம்பத் என்கிற துரைராஜ் ஆகியோர்களுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். ஊரப்பாக்கம் நம்பர் 17 என்ற விலாசத்தில் உள்ள வீடு மற்றும் வீட்டு மனையை ஆகிவற்றை 24.09.1979ல் மதுரைமுத்து நாயக்கர் உயிருடன் இருந்தபோது Postal Department-க்கும் BSNL Signal Tower-க்கும் வாடகைக்கு விட்டார் என்றால் சரிதான். எங்களுடைய குடும்ப சொத்துக்கள் சிலவற்றை 23.04.1987 அன்று நில விரிவாக்கத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆர் ஜிதத்தில் கிடைத்த நஷ்டஈடு தொகையை வைத்து GST ரோட்டில் உள்ள வீட்டை Tiled House ஆக மாற்றி கட்டினார் என்றால் சரிதான். 24.09.1989ல் என் தந்தை குடும்ப ஏற்பாட்டின் படி எல்லோருக்கும் சொத்து ஒதுக்கினார் என்றும், ஆனால் பாகம் பிரிக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். அந்த பாகம் பிரிப்படாத சொத்துக்களுக்கு தான் OS.438/2006 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றால் நடந்து வருகிறது. மதுரைமுத்து நாயக்கர் கிருஷ்ணனுக்கு உயில் எழுதி வைத்தது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)